பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறையிலேயே இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் ஆங்காங்கே இருப்பதால், நடைபாதைகளில் மக்கள் நடக்க முடியாமல், சாலைகளின் குறுக்கே நடந்து, விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே அவைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. சந்தோஷம் : மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னபோது, உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால், இந்தக் கடைகளை அகற்றி விடலாமென்று சொன்னார்கள். இது சரியாகப் புரியவில்லை. உறுப்பினர்கள் என்ன மாதிரி ஒத்துழைப்புத் தர வேண்டும்? உறுப்பினர்கள் அந்தக் கடைகளில் உள்ள காய்கறிகளை அள்ளிக் கொண்டு போக வேண்டுமா ? வேறு என்ன செய்ய வேண்டும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசு இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்றபோது, அவர்கள் உறுப்பினர்களிடத்தில்தான் வருவார்கள். இதை ஒரு பிரச்சினையாகக் கொண்டு வருவார்கள். அப்போது, அரசாங்கம் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அதை ஒரு பிரச்சினையாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வரக்கூடாதென்பதற்காகத்தான் சொன்னேன்.

சென்னை-வேதாரண்யம் திருவள்ளுவர் துரிதப் பேருந்து.

*** 93 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) நல்ல வசூலைத் தந்து வந்த சென்னை-வேதாரண்யம் திருவள்ளுவர் துரிதப் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதால், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய இரு வட்டங்களிலுமுள்ள பொதுமக்கள் அல்லல்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) & (இ) பொது மக்களின் நன்மையைக் கருதி மீண்டும் இத்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் துரிதப் பேருந்துகளை விரைவில் இயக்கவிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஏற்கெனவே சென்னையிலிருந்து வேதாரண்யம் சென்று திரும்பிய திருவள்ளுவர் துரிதப் பேருந்து சரியான நேரத்தில் வந்து கொண்டிருந்தது. ரயில்வே கால அட்டவணைப்படி 9-20-க்கு சென்னை எக்ஸ்பிரஸ் வருகிறது. அதற்கு முன்னதாக பஸ் வரக்கூடிய வாய்ப்பு இருந்தால், இதில் இடம் இல்லாவிட்டாலும், ரயிலிலே செல்லும் வாய்ப்பு இருந்தது. ஆனால் 9-20-க்குள் பஸ் வரும் சூழ்நிலை இல்லாததால், பஸ்ஸை நம்பாமல் ரயிலிலேயே செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். எனவே ரயில் வருவதற்கு முன்பு திருத்துறைப்பூண்டிக்கு பஸ் வருவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து கவனத்தில் கொண்டு செயலாற்றப்படும். அங்கே யாரும் வண்டியில் ஏறவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தப்படவில்லை. அது குறைந்த தூரம்தான் ஓடுகிறது. சாதாரணமாக 550 கிலோ மீட்டர் ஓட வேண்டும். ஆனால் அங்கே 396 கிலோ மீட்டர்தான் ஓடுகிறது. இதனால் கட்டுமானச் செலவுகள் அதிகமாகுமென்பதால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது இன்னொரு டிரிப் அதிகமாக்கப்பட்டு, மூன்று பேருந்துகளை விட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

Bus Permits

* 94 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of bus permits issued to individuals who have undertaken to lay the roads on which the Buses were intended to ply ;

(*b*) the details of the distances so laid for each of the permits so issued ; and

(*c*) the cost thereof in each case ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இது போன்றதொரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அறிவித்ததாக எனக்கு நினைவு. அரசு அந்த அறிவிப்பின் அடிப்படையில் ஏதாவது நடவடிக்கைகளை இனிமேல் எடுக்க இருக்கிறதா அல்லது அந்தப் பரிந்துரை அரசின் கவனத்திற்கு வராமல் கைவிடப்பட்டிருக்கிறதா ?